# திருவேங்கடத்துக்கு இவை ஒன்பது

M.A.V. மதுஸூதனன்

ஸ்வாமி எம்பெருமானார் இப்பூவுலகில் வாழ்ந்த காலத்தில் திருமலைத்தெய்வமான திருவேங்கடமுடையானைச் சிலர் ஸுப்ரமண்யன் என்றும் திருமலையும் ஸ்வாமி புஷ்கரிணியும் அவனுடையதே என்றும் சொல்லி அவ்வூர் யாதவ மன்னனிடம் முறையிட்டனர். இதைக் கேள்வியுற்ற வைணவர்கள் திருவரங்கத்தில் இருந்து எம்பெருமானாரை அழைத்து வரச்செய்தனர். ஸ்வாமி புராணங்களை கொண்டும் வேறு சில யுக்திகளைக் கொண்டும் திருமலைத் தெய்வம் ஸ்ரீமந் நாராயணனே என்று நிலைநாட்டினார். மேலும் வருங்காலத்திலும் இது போல இந்த தெய்வம் தங்களுடைய தேவதை என்று யாரும் உரிமை கொண்டாடக்கூடாது என்பதற்காக திருமலையில் பலபல ஏற்பாடுகளையும் செய்தார். அப்போது திருமலை அப்பன் முன்னிலையில் அங்கு குழுமியிருந்த வைணவர்களுக்கு உபநிஷத் வாக்கியங்களை, எடுத்துரைத்து உபநிடதங்களில் கூறப்பட்டுள்ளது விசிஷ்டாத்வைத கோட்பாடுகளே என்பதை பரக்க உபந்யசித்து அருளினார். அதற்கு பிறகே ஸ்வாமி பிற க்ரந்தங்களை இயற்ற ஆரம்பித்தார். ஸ்வாமி அருளிய ஒவ்வொரு க்ரந்தத்திலும் ஒவ்வொரு வார்த்தையிலும் நம் சித்தாந்தக் கோட்பாடுகள் ஆணித்தரமாகப் பதிந்துள்ளன. அதே போல ஸ்வாமி அருளிய ஒவ்வொரு க்ரந்தத்திலும் திருவேங்கடமுடையானுடைய சம்பந்தம் உள்ளது என்பதை சுருக்கமாக தெரிவிப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

1. வேதார்த்த ஸங்க்ரஹம் – ஸ்வாமி அருளிய முதல் க்ரந்தம் இதுவே. ஸ்வாமி இந்த க்ரந்தம் அருளியது திருமலையில் என்று ச்ருத ப்ரகாசிகை கூறுகிறது. மற்ற வேதாந்த மதங்களின் கோட்பாடுகளை (பூர்வபக்ஷமாக) சுருக்கிக் கூறிவிட்டு பல்வேறு உபநிடத வாக்கியங்கள் அவர்கள் கூறும் விளக்கங்களுக்கு எப்படிப் பொருந்தாமல் உள்ளன என்பதையும் அந்த வாக்கியங்கள் எப்படி விசிஷ்டாத்வைதக் கோட்பாடுகளையே உணர்த்துகின்றன என்பதையும் விளக்கி, திருமலையப்பன் நியமனத்தோடு அவன் முன்னிலையில் ஸ்வாமி ஓர் உபன்யாசம் செய்தார். அந்த உபன்யாசத்தை அவருடைய சிஷ்யர் (திருமலை அனந்தாழ்வானாக இருக்கலாம்) ஏடுபடுத்தி வைத்தார். அதுவே வேதார்த்த ஸங்க்ரஹம் ஆகும். ஆக ஸ்வாமியின் முதல் க்ரந்தம் திருவேங்கடமுடையானுடைய நியமனத்தோடு திருமலையிலேயே இயற்றப்பட்டதால் இந்த க்ரந்தத்திற்கு திருவேங்கடமுடையானுடன் உள்ள சம்பந்தம் கையிலங்கு நெல்லிக்கனி.

2. ஸ்ரீ பாஷ்யம் – வேதாந்தங்களில் (உபநிடதங்களில்) பல்வேறு இடங்களில் பரஸ்பர விரோதம் உள்ளது போல் தோன்றும் வாக்கியங்களை பொருந்த விட வேதவ்யாஸர் ப்ரஹ்ம ஸூத்ரம் இயற்றினார். அந்த ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்கு விளக்கம் அளிப்பதற்காக ஸ்வாமி அருளிய இந்த க்ரந்ததில் முதல் ஸ்லோகமான மங்கள ஸ்லோகத்திலேயே திருவேங்கடவனை த்யானித்து தமக்கு பக்தி அளிக்குமாறு பிரார்த்தித்துக் கொள்கிறார்.

“அகில புவன ஜன்ம ஸ்தேம பங்காதி லீலே
விநத விவித பூதவ்ராத ரக்ஷைக தீக்ஷே
ஸ்ருதிசிரஸி விதீப்தே ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே
பவது மம பரஸ்மின் சேமுஷீ பக்தி ரூபா”

என்கிற இந்த ஸ்லோகத்தில் "ஸ்ருதி சிரஸி

விதீப்தே ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே" என்கிற வரி உயிரானது. அதாவது ஸ்ருதி சிரஸ்ஸாகிற உபநிடதங்களில் ப்ரதிபாதிக்கப்படும் தெய்வம் ஸ்ரீனிவாஸன் என்று ஆணித்தரமாகக் கூறி, அந்த ஸ்ரீநிவாஸன் தமக்கு பக்தியை அளிக்கட்டும் என்று பிரார்த்திக்கும் விதமாக அமைந்துள்ளது. வேதாந்தத்தில் ப்ரதிபாதிக்கப்படும் தெய்வம் வேங்கடவன் என்றால் ப்ரஹ்ம ஸூத்ரத்திலும் மேலே விவரிக்கப்பட்ட வேதார்த்த ஸங்க்ரஹ க்ரந்தத்திலும் ப்ரதிபாதிக்கப்படும் தெய்வம் வேங்கடவனே என்பதில் ஐயமில்லை. பல எம்பெருமான்கள் இருக்க ஏன் இந்த ப்ரார்த்தனையை வேங்கடவனிடத்தில் ஸ்வாமி செய்தார் என்ற காரணம் அற்புதமானது. ஸ்வாமி குறையல்பிரான் அடிக்கீழ் விள்ளாதவன்பன் என்கிற காரணத்தாலே, "காம்பினார் திருவேங்கடப் பொருப்ப நின் காதலையருளெனக்கு" (பெரிய திருமொழி 5–3–4) என்கிற கலியன் திருவாக்கை அப்படியே மொழிபெயர்த்தார். ஆக ஸ்வாமி அருளிய ஸ்ரீபாஷ்யத்தில் திருவேங்கடமுடையான் சம்பந்தம் உள்ளது. (இதில் நாம் குறிக்கொள்ள வேண்டிய விஷயம் ஒன்றுள்ளது. ச்ருதப்ரகாசிகை முதலான க்ரந்தங்களில் ஸ்ரீநிவாஸன் என்கிற சொல் பொதுவாக ஸ்ரீமந் நாராயணனைக் குறிப்பதாகவே காட்டப்பட்டிருப்பினும் ஸ்ரீநிவாசன் என்கிற திருநாமம் திருவேங்கடமுடையானுக்கே ரூடியாக வழங்கப்பெற்று வருவதால் ச்லோகத்தில் உள்ள ஸ்ரீநிவாசன் எனும் சொல் திருமலையப்பனையே குறிப்பதாக நாம் கொள்ளலாம்.)

3. வேதாந்த ஸாரம், 4. வேதாந்த தீபம் ஆகிய நூல்கள் இரண்டும் ஸ்ரீபாஷ்யத்தில் உள்ள விஷயங்களையே ஸாரமாகவும் சுருக்கமாகவும் விளக்கி தம்முடைய ஸ்ரீபாஷ்யத்திற்கு டீகையாக தாமே அருளிய சிறிய க்ரந்தங்கள் ஆகையால் இந்த க்ரந்தங்களும் திருவேங்கடமுடையானை குறித்தே என்றே நாம் கொள்ளலாம். மேலும் வேதாந்த தீபத்தின் மங்களச்லோகத்தில் முதன்முதலில் 'ச்ரிய:காந்த:' என்றும், வேதாந்த ஸாரத்தின் மங்களச்லோகத்தில் 'ஸ்ரீமதே' என்றும் ஸ்ரீநிவாஸனையே குறித்து அருளிச்செய்வதாகவே கொள்ளலாம்.

5. கீதா பாஷ்யம் – அறிவினால் குறைவில்லா அகல்ஞாலத்தவரறிய, நெறியெல்லமெடுத்துரைக்க ஸ்ரீமன் நாராயணன் கண்ணனாக அவதரித்தான். அவன் அருளிய கீதை 700 ஸ்லோகங்களுக்கும் மேல் இருந்தாலும் நம் ஆசார்யர்கள் "ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய" என்கிற சுலோகத்தையே கீதாசாரமாக கொண்டனர். சரம உபாயத்தை கூறுவதால் இந்த சுலோகத்தை சரம ஸ்லோகம் என்று அழைப்பர். இந்த சரமஸ்லோகத்தை உணர்த்தும் விதமாகவே திருவேங்கடவன் எழுந்தருளியுள்ளான். "ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ" என்கிற முதல் பாதியை உணர்த்த தன்னுடைய திருவடிகளை வந்து பற்றுமாறு அழைக்கும் விதமாக தனது வலது திருக்கரத்தால் தன்னுடைய திருவடிகளைக் காட்டிக் கொண்டும் "அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுச:" என்கிற அடுத்த பாதியை உணர்த்த தன்னைப் பற்றியவர்களுக்கு இந்த சம்சார சாகரத்தை முழங்கால் அளவாக வற்றும்படி செய்து விடுவதைத் தெரிவிக்க தன்னுடைய இடது கரத்தை இடது முழந்தாளைத் தொட்டுக்கொண்டும் எழுந்தருளியுள்ளான். ஆக அன்று கீதையில் பாடியதை (வேங்கடத்தில்) ஆடிக் காட்டுகிறான் (அபிநயித்துக் காட்டுகிறான்). திருவேங்கடவன் எழுந்தருளியுள்ள இந்த நிலையை ஆழ்வார் "அடிக்கீழமர்ந்து புகுந்து

அடியீர் வாழ்மின் என்றென்று அருள் கொடுக்கும் படிக்கேழில்லாப் பெருமான்" என்று தெரிவிக்கிறார். இப்பாசுரத்தின் வ்யாக்யானங்களில் இவ்விஷயங்கள் தெளிவிக்கப் பட்டுள்ளன. ஆக சரம ச்லோக ப்ரதிபாத்யன் வேங்கடவன் என்பதால் முழு கீதைக்கும் அவனே விஷயபூதன் ஆகிறான். ஆக ஸ்வாமி அருளிய கீதா பாஷ்யத்தில் திருவேங்கடமுடையான் சம்பந்தம் பூர்த்தியாக உள்ளதை நாம் உணரலாம்.

6. சரணாகதி கத்யம் – எம்பெருமானார் ஒரு பங்குனி உத்தரத் திருநாளன்று பிராட்டியை முன்னிட்டுக் கொண்டு எம்பெருமானிடம் சரணாகதி செய்ததே சரணாகதி கத்யம். முழுமையான சரணாகதியை எப்படிச் செய்யவேண்டும் என்கிற க்ரமத்தை தெளிவாகக் காட்டியவர் நம்மாழ்வார். திருவாய்மொழியில் ஏனைய சரணாகதிகள் இருந்தாலும் 'உலகமுண்டா பெருவாயா' பதிகத்தில் உள்ள சரணாகதியே பூர்ண சரணாகதி என்று ஆசார்யர்கள் காட்டுகின்றனர். "அகலகில்லேன்" பாசுரத்தில் த்வயத்தின் பூர்வகண்டத்தின் அர்த்தங்கள் தோற்ற தம்முடைய ஆகிஞ்சந்ய அநந்ய கதித்வங்களை அனுசந்தித்துக்கொண்டு அலர்மேல் மங்கையைப் புருஷகாரமாகப் பற்றித் திருவேங்கடமுடையான் திருவடிகளில் சரணம் புக்கார். ஆக, பரிபூர்ண சரணாகதி என்றால் அது திருவேங்கடவனிடத்தில் என்று நம்மாழ்வார் காட்டியருளினார். "தாள் பரப்பி மண்தாவி ஈசனை" என்றும், "எந்நாளே மண்ணளந்த இணைத் தாமரைகள் காண்பதற்கு" என்றும் திருவேங்கடவனை உலகமளந்த திரிவிக்ரமனாகவே அருளிச் செய்தார் நம்மாழ்வார். எம்பெருமானாரும் சரணாகதி கத்யத்தில் "லோகவிக்ராந்த சரணௌ சரணம் தே அவ்ரஜம் விபோ" என்று திரிவிக்ரமன் திருவடிகளிலேயே சரணாகதி செய்வதாக அருளியுள்ளார். எனவே மாறன் அடி பணிந்து உய்ந்தவரான எம்பெருமானார் செய்த சரணாகதி கத்யமான பரிபூர்ண சரணாகதியும் திருவேங்கடமுடையானை குறித்தே செய்யப்பட்டது என்று கொள்ளலாம்.

7. ஸ்ரீரங்க கத்யம் – மற்ற க்ரந்தங்களில் திருவேங்கடமுடையான் சம்பந்தம் ஒருவாறு காட்டலாம். ஆனால் ஸ்ரீரங்கநாதனை ப்ரத்யேகமாக துதித்த இந்த க்ரந்தத்தில் திருவேங்கமுடையான் சம்பந்தம் எப்படி காட்டமுடியும் என்கிற கேள்வி எழலாம். ஆனால் இந்த க்ரந்தத்திலும் திருவேங்கடமுடையான் சம்பந்தம் பூர்த்தியாக உள்ளது. அதை உணர நாம் திருப்பாணாழ்வார் பாசுரத்தைக் கொண்டு நோக்க வேண்டும். அமலனாதிபிரான் தொடங்கும் போது பெரியபெருமாளைப் பாட நினைத்து "விரையார் பொழில் வேங்கடவன்" என்று திருவேங்கடவனையே முதலில் பாடினார். இப்பாசுரத்திற்கு வ்யாக்யானம் அருளிச்செய்த பெரியவாச்சான் பிள்ளையும் அழகிய மணவாளப்பெருமாள் நாயனாரும் "பெரிய பெருமாளைப் பாடா நிற்க திருமலைக்கு போவானென்" என்று தாங்களே கேட்டுக்கொண்டு சமாதானமும் அளித்துள்ளனர். "ஒருவனைக் கவிபாடும் போது அவன் வரத்துச் சொல்லியிறே கவிபாடுவது. 'பரமபதத்தில் நின்றும் ஸ்ரீ மதுரையிலே தங்கித் திருவாய்ப்பாடிக்கு வந்தாப்போலே, ஸ்ரீ வைகுண்டத்தினின்றும் திருமலையிலே தங்கிக்காணும் கோயிலுக்கு வந்தது' என்று பட்டர் அருளிச்செய்யும்படி" என்பது பெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்தி. மேலும் திருவேங்கடம் "அர்ச்சாவதாரத்துக்கு பொற்கால் பொலியவிட்ட இடம்" என்று எல்லா திவ்யதேசங்களுக்கும் முதன்மையான ஸ்தலம் இதுவே என்றும் காட்டுகிறார்கள். திருப்பாணாழ்வாரை அடியொற்றி திருமங்கை

ஆழவார் திருவரங்க நாதனைப் பாடும் "ஏழை ஏதலன்" பதிகத்தில் "துளங்கு நீள்முடி" பாசுரத்தில் திருவேங்கடமுடையான் விஷயமான சரித்திரத்தை விவரித்தார். தர்மி ஐக்யத்தால் திருவேங்கடவனும் திருவரங்க னும் ஒருவனே என்பது சகல ஆழ்வார் ஆசார்யர்களின் திருவுள்ளம். ஆக, ஸ்ரீரங்க நாதனை குறித்து அருளிச்செய்யப் பட்ட ஸ்ரீரங்க கத்யத்தில் திருவேங்கடவன் சம்பந்தம் பூர்த்தியாக அமைந்துள்ளது. இதே காரணங் களைக் கொண்டு பார்த்தல் ஸ்ரீரங்கநாதனிடம் செய்த சரணாகதியும் திருவேங்கடவனிடத்தி லேயே செய்யப்பட்டது என்றும் விளங்கும்.

8. ஸ்ரீ வைகுண்ட கத்யம் – பரமபதத்தில் எழுந்தருளி இருக்கும் வைகுண்டநாதனைக் குறித்து ஸ்வாமி இயற்றிய இந்த க்ரந்தத்தை அதே திருப்பாணாழ்வார் பாசுரங்களை கொண்டு நாம் பார்க்க வேண்டும். "விண்ணவர் கோன் விரையார் பொழில் வேங்கடவன்" என்று பரமபதத்தில் நித்யஸூரிகளுக்கு முகம் காட்டுபவன் தான் வேங்கடத்தில் வந்து நிற்கிறான் என்றே திருப்பாணாழ்வார் அருளிச்செய்துள்ளார். "மந்திபாய் வடவேங்கட மாமலை வானவர்கள் சந்தி செய்ய நின்றான்" என்கிற பாசுர வ்யாக்யானத்தில் நாயனார் இவ்விஷயத்தை மிகத்தெளிவாகக் காட்டியுள்ளார். "விண்ணவர்கோனான தன்னுடைய மேன்மையை அனுபவித்துக் கொண்டு போந்த ஸூரிகள், விரையார் பொழில் வேங்கடவனான நீர்மையை அனுபவிக்கைக்காக திருமலைக்கு வருவர்கள். அந்நீர்மைக்கு அடியான மேன்மையை அனுபவிக்கைக்காக திருமலையினின்றும் பரமபதமேறப் போவர்கள்" என்கிற நாயனார் ஸ்ரீஸூக்தி இவ்விஷயத்தை நன்கு மூதலிக்கிறது. அதாவது, திருவேங்கடமுடையான் தன்னுடைய நீர்மையைக் காட்டும் ஸ்தலம் திருமலை என்றும் தன்னுடைய மேன்மையை காட்டும் இடம் பரமபதம் என்றபடி. பரமபதநாதன் வேங்கடவனாய் சேவை சாதிக்கிறான் என்று சொல்வதைக் காட்டிலும் வேங்கடவன் தான் பரமபதத்தில் பரமபதநாதனாக சேவை சாதிக்கிறான் என்று சொல்வதே ஆசார்யர்கள் திருவுள்ளத்தை அனுசரித்ததாகும். ஆக, வைகுண்ட கத்யமும் திருவேங்கடவனைக் குறித்தே அருளிச்செய்யப்பட்டது என் கொள்வதில் தடையேதுமில்லை.

9. நித்ய க்ரந்தம் – ப்ரபந்ந தினசர்யையை விளக்க இந்த க்ரந்தத்தை ஸ்வாமி அருளியுள்ளார். பஞ்ச கால பராயணர்கள் என்றழைக்கப் படும் ஸ்ரீவைஷ்ணவர்களான ஒவ்வொருவருக்கும் பகவத் ஆராதனம் அவசியமான கைங்கர்யமாகும். அப்படிப்பட்ட கைங்கர்யத்தை நம்மாழ்வார் ப்ரார்த்தித்தது திருவேங்கடமுடையானிடத்தில் தான். "ஒழிவில் காலமெல்லாம் வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்" என்று, திருமலையப்பனுக்கு வழுவிலா அடிமை செய்வதையே பாரித்தார். மாறன் அடி பணிந்தவரான எம்பெருமானாரும் நாம் நித்யம் அனுஷ்டிக்க வேண்டிய கைங்கர்யத்தை செய்யும் வழிமுறைகளை விளக்கும் க்ரந்தத்தை திருமலையப்பனை குறித்தே இயற்றினார் என்னத் தட்டில்லை.

ஆக, இவ்விஷயங்களால் "சென்றால் குடையாம் இருந்தால் சிங்காதனமாம்" என்றபடி திருமலையாய் இருந்துகொண்டு திருவேங்கடவனுக்கு கைங்கர்யம் செய்யும் திருவனந்தாழ்வான் ராமாநுஜாராய் அவதரித்த போது அருளிய க்ரந்தங்கள் ஒன்பதிலும் (சிலவற்றில் வெளிப்படையாகவும் சிலவற்றில் ஸூசகமாகவும்) திருவேங்கடவனுடைய ஸம்பந்தம் இருப்பதைச் சுருக்கமாக அனுபவித்தோம்.